# தென்காசி நகராட்சி

## 2019–2020–ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

### 1. நிறுவனமும் மேற்பார்வையும்

தென்காசி நகராட்சி, தென்காசி புலியூர் ஆகிய இரண்டு வருவாய் கிராமங்களைக் கொண்டதாகும். இந்நகராட்சி 27.01.1965ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 196ம் எண். அரசாணையின்படி 01.04.1965 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக முதன்முதலாக அமைக்கப்பட்டது. பின்னர் 16.10.1977ம் தேதிய அரசு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் ஆணை எண். 665.ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாகவும் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 22.05.1998ம் தேதிய ஆணை எண் 85ன்படி முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது.

இந்நகராட்சியின் பரப்பளவு 26.1588 சதுர கிலோமீட்டராகும். 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்குப்படி மக்கள் தொகை 70530. இதில் ஆண்கள் 34890 பெண்கள் 35616 மற்றவர் 24 ஆகும்.

### 2. மன்றம்

2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் அரசு ஆணை எண். 135 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.06.1996ன்படி இந்நகர் பகுதி 33 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு , நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

| | |
|---|---|
| 1. பொதுவார்டு | 20 |
| 2. பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது | 9(வார்டு எண். 2, 4, 12, 17, 21,23,29,31,33) |
| 3. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (பெண்கள்) | 2 (வார்டு எண். 10, 27) |
| 4. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (ஆண்கள்) | 2 (வார்டு எண். 3, 20) |
| மொத்தம் | 33 வார்டுகள் |

மன்றத்தின் பதவிக்காலம் 24.10.2016—உடன் முடிவடைந்ததனை முன்னிட்டு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் படி நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் நடைபெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடையினை முன்னிட்டு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு அரசாணை 146 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல் ) துறை நாள் 24.10.2016—ன்படி தனிஅலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள்,

3. **<u>அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவாறு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.</u>**

| | |
|---|---|
| சாதாரணக் கூட்டம் | – 12 |
| அவசரக் கூட்டம் | – |
| சிறப்புக் கூட்டம் | – |
| உள்ளூர்திட்டக் குழுக் கூட்டம் | – |
| ஒப்பந்தக் குழுக் கூட்டம் | – |
| வரிமேல் முறையீட்டுக்குழுக் கூட்டம் | – |
| நியமனக்குழுக் கூட்டம் | – |

4. **<u>ஆணையாளர்:</u>**

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவிபரப்படி ஆணையாளர்களாக பணிபுரிந்து வந்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1 | திரு. ஜெ.பிரேம் ஆனந்த் | 01.04.2019 முதல் 15.11.2019 |
| 2 | திருமதி. கே.எஸ்.ஹசீனா, நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் கூடுதல் பொறுப்பு | 15.11.2019 முதல் நாளது தேதிவரை |

**<u>5. நகராட்சி பொறியாளர்</u>**

| | | |
|---|---|---|
| 1 | கே.எஸ். ஹசினா , நகராட்சிப்பொறியாளர் | 01.04.2019 முதல் நாளது தேதி வரை. |

**6. <u>மேலாளர் மற்றும் கணக்கர்</u>**

| | | |
|---|---|---|
| 1 | திருமதி. ப. மாரியம்மாள் | 01.04.2019 முதல் நாளது தேதிவரை |
| 2. | திரு. ச. சுப்பிரமணியன் | 01.04.2019 முதல் நாளது தேதிவரை |

**7. வரி விதிப்பு**

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி சொத்து வரி விதிக்கப்படுகிறது,

| | | |
|---|---|---|
| 1. | பொது காரியங்கள் | 5 சதவிகிதம் |
| 2. | பொதுசுகாதாம் | 1 „ |
| 3. | விளக்கு வரி | 2 „ |
| 4. | குடிநீர் (ம) வடிகால்வரி | 6 „ |
| 5. | கல்வி வரி | 2.50 „ |
| 6. | நூலகவரி | 1. 40 „ |
| | மொத்தம் | 17.90 சதவிகிதம் |

**8. சாலைகள்**

அறிக்கை ஆண்டின் இறுதியில் கீழ்க்கண்ட விபரப்படி உள்ள சாலைகள் இந்நகராட்சியின் பராமரிப்பில் இருந்து வருகின்றது.

| | | கிலோ மீட்டர் |
|---|---|---|
| சிமெண்ட் கான்கிரீட் சாலை / சிமெண்ட் தளக்கறகள் | – | 43.550 |
| தார் சாலை | – | 47.689 |
| மெட்டல் சாலை | – | 10.971 |
| மண் சாலை | – | 4.700 |
| இதர வகைகள் | – | 0.000 |
| **மொத்தம்** | – | **106.910** |

**9. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–20**

ரூ60.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்டவாறு சாலைப்பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மங்கம்மாள் சாலையில் தார் சாலை அமைத்தல் | 10.00 |
| 2 | மங்கம்மாள் சாலை குறிஞ்சி நகரில் தார் சாலை அமைத்தல் | 10.00 |
| 3 | மாலிக் நகரில் தார் சாலை அமைத்தல் | 10.00 |
| 4 | சொர்ணபுரம் தெருவில் தார் சாலை அமைத்தல் | 10.00 |
| 5 | உச்சி மாகாளி அம்மன் கோவில் 1ம் தெருவில் தார் சாலை அமைத்தல் | 10.00 |
| 6 | மதினா நகரில் தார் சாலை அமைத்தல் | 10.00 |
| | மொத்தம் | 60.00 |

**10. சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19**

ரூ2.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 50 எண்ணம் LED தெரு விளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**11. திறந்த வெளியில் மலம் கழிக்கும் செயலினை ஒழிக்கும் திட்டம் 2019-20**

பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

**12. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2019-20**

ரூ700.00 இலட்சம் மதிப்பீட்டில் 6 சிப்பங்களாக கீழ்கண்டவாறு சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 2 மங்கம்மாள் சாலை, வார்டு எண் 19 சொர்ணபுரம் மேட்டுத் தெரு மற்றும் வார்டு எண் 31 உச்சி மாகாளி அம்மன் கோவில் 1ம் தெரு ஆகிய தெருக்களில் தார்தளம் அமைத்தல் | **175.00** |
| 2 | வார்டு எண் 14 வடக்கு ரத வீதி, வார்டு எண் 20 மேல மாசி வீதி மற்றும் வார்டு எண் 31 புலிகுட்டி விநாயகர் கோவில் தெரு முதல் சுடுகாடு வரை ஆகிய தெருக்களில் தார்தளம் அமைத்தல் | **174.00** |
| 3 | வார்டு எண் 1 காளிதாஸ் நகர், வார்டு எண் 3 களக்கோடி தெரு, அப்துல் கலாம் நகர் & வார்டு எண் 27 ஆசாத் நகர் மற்றும் வார்டு எண் 9 ஆபாத் பள்ளிவாசல் தெரு மற்றும் ஆகிய தெருக்களில் தார்தளம் அமைத்தல் | **173.00** |
| 4 | வார்டு எண் 1 சக்தி நகர் ஹோண்டா ஷோரூம் முதல் விரிவாக்க பகுதி வரை (பூங்கா அருகில்) மற்றும் வார்டு எண் 1 தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய காலனி M & L டைப் முதல் விரிவாக்கப் பகுதி வரை ஆகிய தெருக்களில் தார்தளம் அமைத்தல் | **178.00** |
| | மொத்தத் தொகை | **700.00** |

## 13. 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை மான்ய திட்டம் (14thCFC) 2019-20

ரூ197.60 இலட்சம் மதிப்பீட்டில் 4 சிப்பங்களாக கீழ்கண்டவாறு சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்: 1அண்ணா நகர் மற்றும் காளிதாஸ் நகர் ஆகிய பகுதிகளில்தார்தளம் அமைத்தல் | 49.50 |
| 2 | வார்டு எண்: 1 சக்தி நகரில் தார்தளம் அமைத்தல் | 49.50 |
| 3 | வார்டு எண்: 4 சப்ஜெயில் ரோடு, வார்டு எண்: 14 கன்னிமாரம்மன் கோவில் தெரு, வார்டு எண்: 15 வடக்கு ஒப்பனை பிள்ளையார் கோவில் தெரு மற்றும் வார்டு எண்: 22 தெற்கு ஒப்பனை பிள்ளையார் கோவில் தெரு ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் | 49.10 |
| 4 | வார்டு எண்: 26 கீழப்பாளையம் (பாவடி) மற்றும் மாதாங்கோவில்1ம் தெரு ஆகிய இங்களில் தார்தளம் அமைத்தல் | 49.50 |

## 14. பொது நிதி 2019-20

ரூ39.40 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2019-20ன் 4 சிப்பங்களாக கீழ்கண்டவாறு சாலைப் பணிகள் எடுக்கப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 5 மேலவாலிபன் பொத்தையில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 9.90 |
| 2 | வார்டு எண் 20 சிந்தாமணியில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல் | 9.80 |
| 3 | வார்டு எண் 31 உச்சி மாகாளி அம்மன் கோவில் 1ம் தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல் | 9.80 |
| 4 | வார்டு எண் 21 அம்மன் சன்னதி 2ம் தெருவில் (ஊத்துக்குளி முடுக்கு) சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல் | 9.90 |

**15. தூய்மை இந்தியா திட்டம் 2018–19 (திடக் கழிவு மேலாண்மை)**

ரூ373.80 இலட்சம் மதிப்பீட்டில் 7வது மாநில உயர்மட்ட குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு கீழ்கண்டவாறு பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | முதல்நிலை திடக்கழிவு சேகரப்பணிக்காக பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (Battery Operated Vehicle) 11 எண்ணம் விநியோகம் செய்தல் | 19.80 |
| 2 | ஆய்க்குடி ரோட்டில் உள்ள விலங்குகள் (நாய்) காப்பகம் மற்றும் கருத்தடைசெய்யும் கட்டிடம் அருகில் 3TPD Micro compost Processing Centre (MCC) அமைத்தல் | 40.00 |
| 3 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய காலனியில் 3TPD Micro compost Processing Centre (MCC) அமைத்தல் | 40.00 |
| 4 | தலைமை தபால் நிலையம் பின்புறம் 4TPD Micro compost Processing Centre (MCC) அமைத்தல் | 45.00 |
| 5 | மத்தளம்பாறை உரக்கிடங்கில் 4TPD Micro compost Processing Centre (MCC) அமைத்தல் | 45.00 |
| 6 | மத்தளம்பாறை உரக்கிடங்கில் சேகரமடைந்த குப்பைகளை (Legacy Waste) Bio-Mining மூலம் அப்புறப்படுத்துதல் | 184.00 |
| | **மொத்தத் தொகை** | **373.80** |

மேற்கண்ட 6 பணிகளில் வரிசை எண் 1 முதல் 5 வரையுள்ள பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 1 பணி நடைபெற்றுவருகிறது.

8வது மாநில உயர்மட்ட குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு ரூ45.00 இலட்சம் மதிப்பீட்டில் Battery Operated Vehicle (BOV) 25 எண்ணம் விநியோகிக்கும் பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் ரூ39.20 இலட்சம் மதிப்பீட்டில் Light Commercial Vehicle (LCV) (2cu.m) 7 எண்ணம் விநியோகிக்ம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**16. ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM) 2018-19**

ரூ415.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018-19ன் கீழ் நகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து கட்டிடங்களில் சேகரமாகும் கழிவு நீரினை பதப்படுத்தி சுத்திகரிப்பு செய்து விவசாய பயன்பாட்டிற்கு பயன்படுத்த இந்நகராட்சிக்கு

சொந்தமான மத்தளம்பாறை ரோடு உரக்கிடங்கில் 40KLD அளவில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது

**17. சுவர்ணஜெயந்தி திட்டம்**

2019-20 ம் ஆண்டு எவ்வித மானியமும் வழங்கப்படவில்லை.

**18. தெருவிளக்குகள்**

தென்காசி நகராட்சி பகுதியில் 106.91 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | தெரு விளக்குகளின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 40 watts tube lights | 1769 |
| 2 | 70 watts SV Lamps | 12 |
| 3 | 150 watts SV Lamps | 300 |
| 4 | 250 watts SV Lamps | 259 |
| 4 | High mass light | 11 |
| 5 | T5 Lamp (4X24 Watts) | 100 |
| 6 | T5 Lamp (4X36 Watts) | 100 |
| 7 | 250 watts MH | 92 |
| Total Per Year | | 2643 |

தெருவிளக்குகள் பராமரிக்கும் பணி செப்டம்பர் 2002 முதல் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது நகரில் 100 சதவீதம் தெருவிளக்குகள் எரியச் செய்யப்பட்டுள்ளது.

**19. புதிய விளக்குகள்**

ரூ2.00 இலட்சம் மதிப்பீட்டில் எல்.இ.டி விளக்குகள் அமைக்கும் பணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018-19ன் கீழ் நடைபெற்று வருகிறது.

**20. ஆரம்பக் கல்வி நிலையங்கள்**

இந்நகராட்சியில் 1 நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் 3 நகராட்சி நடுநிலைப்பள்ளிகள் உள்ளன.

ரூ 1.50 இலட்சம் மதிப்பீட்டில் 1வது வார்டு நகராட்சி துவக்கப்பள்ளியிலும் மற்றும் ரூ3.90 இலட்சம் மதிப்பீட்டில் 13வது வார்டு நகராட்சி நடுநிலைப்பள்ளியிலும் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்கு சொந்தமான 7வது நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் 13வது நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிவற்றில் சுமார் ரூ24.40 இலட்சம் மதிப்பீட்டில் (Smart Class) நவீன வகுப்பறை கல்வி நிதி **2019–20**ன் கீழ் அமைக்கப்பட்டு மேற்படி பள்ளிகளில் பயிலும் மாணவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 21. பூங்காக்களும் தோட்டங்களும்

ரூ19.70 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 1 TNHB காலணி பூங்கா மற்றும் வார்டு எண் 2 மங்கம்மாள் சாலை பூங்கா ஆகிய பூங்காகள் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

## 22. குடிநீர் விநியோகம்

இந்நகரில் 1961ம் ஆண்டு முதல் குற்றாலம் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் ஏற்கனவே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5.65+3.65 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 17 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 1999ம் ஆண்டில் குடிநீர் அபிவிருத்திக்காக தென்காசி குடிநீர் திட்டம் ரூ.1038.17 லட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பணிகள் முடிக்கப்பட்டு 01.01.2005 முதல் நகராட்சியால் இத்திட்டம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையம் இந்நகரிலிருந்து 35 கிலோ மீட்டர் துாரத்தில் அமைந்துள்ள தாமிரபரணி ஆற்றுப் படுகையின் அருகில் ஊர்க்காடு என்ற கிராமத்தில் உள்ளது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 47 லட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

5 இடங்களில் நிரேற்று நிலையங்களும் 4 மேல்நிலைத் தொட்டிகளும் செயல்பட்டு வருகின்றன.

இந்நகராட்சிப் பகுதியில் 182 பொதுக் குடிநீர் குழாய்களும், 290 ஆழ் குழாய் கிணறுகளும் உள்ளன. மேலும், சிறுமின்விசை பம்புகள் 145 எண்ணங்கள் உள்ளன.

இந்நகராட்சியில் 13503 குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன. சராசரியாக நாளொன்றுக்கு 95 LPCDம், கோடை காலங்களில் 85 LPCDம், வழங்கப்பட்டு வருகிறது

மீட்டர் முறையில் உள்ள வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள்

வீட்டு உபயோகத்திற்காக உபயோகிக்கப்படும் குடிதண்ணீர் ஒவ்வொரு 1000 லிட்டருக்கு ரூ6.50 வீதமும் வீட்டு உபயோகம் அல்லாத பிற உபயோகத்திற்கு குடிதண்ணீருக்கு ரூ15.50 வீதமும், கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வீட்டு உபயோகத்திற்கு உள்ள இணைப்புகளுக்கு குறைந்த கட்டணம் மாதம் 1-க்கு ரூ65/- வீதமும் நிர்ணயிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகின்றது. வீட்டு உபயோகத்திற்கு 13286 இணைப்புகளும், வீடு அல்லாத உபயோகத்திற்கு 217 இணைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளது.

## 23.குடிநீர் அபிவிருத்தி திட்டம்:

தினசரி குடிநீர் சீராக வழங்குவதற்கு ஏதுவாக பகிர்மான குழாய்கள் மாற்றியமைத்து தேவையான இடங்களில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய, குடிநீர் விநியோகம் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018-19ன் கீழ் ரூ44.43 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை எண் 82 நாள் 23.08.2018ல் வெளியிடப்பட்டுள்ளது.

## 24.டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டம்

2019–2020ம் ஆண்டில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதிஉதவித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு சுகாதாரத்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## 25. நூல் நிலையங்கள்

இந்நகராட்சியில் ஒரு வாசகசாலை மட்டும் நடத்தப்பட்டு வந்தது. மேற்படி வாசகசாலை அரசாணை எண்.37 நாள். 03.04.2002 ந.நி.ம.கு.வ.துறையின் படி 15.05.2002ம் தேதி நூலக துறைக்கு தானமாக வழங்கப்பட்டு விட்டது. எனவே நூல் நிலையங்கள் எதுவும் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

## 26. ஆரம்பக் கல்வி

இந்நகராட்சி பராமரிப்பின் கீழ் ஒரு நடுநிலைப்பள்ளியும், மூன்று துவக்கப்பள்ளிகளும் இயங்கி வருகின்றன. ஆசிரியர்கள் 01.04.1990 முதல் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டு கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகின்றார்கள்.

## 27. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

இந்நகராட்சியில் 15.09.1982 முதல் சத்துணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நகராட்சி பாடசாலை சத்துணவு கூடங்கள் 4ம் அரசு மான்யத்தில் செயல்படுத்தப்படுகிறது. ஏப்ரல் 2008 முதல் தினந்தோறும் ஒரு குழந்தைகளுக்கு ஐந்து முட்டைகள் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது கூடுதலாக வாரம் ஒரு நாள் உருளைக்கிழங்கு ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

**28. மருத்துவ நிலையங்கள்**

இந்நகராட்சியில் மருத்துவமனைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை. மாவட்ட அரசினர் மருத்துவமனை இந்நகரத்தில் செயல்பட்டு வருகிறது. **19** தனியார் மருத்துவமனைகளும் உள்ளன.

**29. நகர்நல மையம்**

அரசாணை (நிலை) 130 சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் துறை மூலம் நகராட்சி கட்டுப்பாட்டிலிருந்த நகர்நல மையத்தினை பொதுசுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதால் மேற்படி நகர்நலமையம் பொதுசுகாதாரத் துறையின் கீழ் ஒப்படைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

**30. மகப்பேறு குழந்தை பராமரிப்பு நிலையம்**

இந்நகராட்சியில் இரண்டு மகப்பேறு நிலையங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. அறிக்கை ஆண்டில் ஒரு மகப்பேறு உதவியாளர் பணியாற்றி வருகின்றனர். இது தவிர இவர்கள் குடும்ப நலத்திட்டத்திற்கும் தீவிர பிரச்சாரம் செய்து வருகின்றனர். தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு தடுப்பூசி பணிகள் செவ்வனே செய்யப்பட்டு வருகிறது.

**31. குடும்ப நலம்**

2019–20ம் ஆண்டில் இந்நகராட்சிக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை குறியீடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

**32. பொது சுகாதாரம்**

இந்நகராட்சியில் ஒரு துப்புரவு அலுவலரும், நான்கு துப்புரவு ஆய்வாளர்களும் 57 துப்புரவு பணியாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். நகரில் 17 வார்டுகளில் தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி நடைபெற்று வருகிறது.

| | |
|---|---|
| 1. லாரி ஓட்டுநர்கள் | 4 |
| 2. துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | 4 |
| 3. துப்புரவு தொழிலாளர்கள் | 57 |

**33. தொற்றுநோய்**

அறிக்கை ஆண்டில் தொற்றுநோய் எதுவும் ஏற்படவில்லை

**34. கொசு ஒழிப்புத் திட்டம்**

இந்நகராட்சிப் பகுதியில் அரசினால் அனுமதிக்கப்பட்ட கொசு ஒழிப்புத் திட்டம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பிரிவின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள் விபரம்.

1. களப்பணியாளர் – ஒரு பணியாளர் உள்ளார்.
2. மஸ்துார் – பணியிடம் காலியாக உள்ளது.

இத்திட்டத்தை பிற சுகாதாரப்பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டுவரப்படுகிறது. சுகாதார ஆய்வாளர்கள் மேற்பார்வையிட்டு வருகிறார்கள்.

**35. பிறப்பு மற்றும் இறப்பு**

இந்நகராட்சிப் பகுதியில் ஏற்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் பணியினை நான்கு துப்புரவு ஆய்வாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அறிக்கை ஆண்டில் **2241** பிறப்புகளும் **554** இறப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இறந்து பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை **இல்லை** அறிக்கை ஆண்டில் பிறப்பு விகிதம் **31.77** ஆகும். இறப்பு விகிதம் **7.85** ஆகும்.

**36. போலியோ ஒழிப்புத் திட்டம்**

கீழ்க்கண்டவாறு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

| நாள் | பயனடைந்தோர் |
|---|---|
| 19–01–2020 | 7494 |

**37. பள்ளி சிறுவர் நலத்திட்டம்**

மேற்கண்ட திட்டத்தில் 18100 பள்ளிச் சிறுவர்கள் பயனடைந்துள்ளனர்.

**38. இரும்புச் சத்து மாத்திரை வழங்கப்பட்டவர்கள்**

அறிக்கையாண்டில்7250 நபர்களுக்கு இருப்பு சத்து மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளது.

**39. வைட்டமின் ஏ**

2019–20ம் ஆண்டில் 5954 குழந்தைகளுக்கு வைட்டமின் A Solution வழங்கப்பட்டுட்டது.

**40. திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்**

நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகள், வர்த்தக நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் முறையாக மட்கும் கழிவுகள் தனியாகவும், மட்காத மறுசுழற்சி செய்யக் கூடிய கழிவுகள் தனியாகவும் பிரிக்கப்பட்டு நகராட்சி கலவை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு , மட்கும் கழிவுகளை கொண்டு கலவை உரம் தயார் செய்யப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை முழுமையான அளவில் செயல்படுத்திடவும், கலவை உர விற்பனையினை அதிகப்படுத்திடவும், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**41. கலவை உர அபிவிருத்தி**

இந்நகராட்சியில் அம்பாசமுத்திரம் சாலையில் கலவை உரக்கிடங்கு அம்பை ரோடு மத்தளம்பாறை கிராமத்தில் 3.03 ஏக்கர் மற்றும் கடையநல்லூர் வட்டம், போகநல்லூர் கிராமத்தில் 8.25 ஏக்கர் மொத்தம் 11.28 ஏக்கர் பரப்பளவில் நகராட்சிக்குச் சொந்தமான கலவை உரம் தயாரிக்கும் இடம் உள்ளது.

**42. பலன் தரத் தக்க வருவாய்கள்**

இந்நகராட்சியிலிருந்து ஒரு வாரச்சந்தையும், ஒரு தினசரி சந்தையும் செயல்பட்டு வருகிறது. 2019–2020 ஆண்டில் மேற்படி இனங்கள் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூ.12,51,432 ஆகும்.

**43. பேருந்து நிலையம்**

இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்து ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 12/– வீதம் கட்டணம் குத்தகைதாரர் மூலம் வசூலிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. பேருந்து நிலையத்திற்குள் வந்து போகும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (குத்தகை) | ரூ. | 12,74,490 |
| 2. பேருந்து நிலைய கடைகள் கட்டணங்கள் வசூல் | ரூ. | 62,11,554 |
| மொத்தம் | ரூ. | 74,86,044 |

**44. கட்டணக் கழிப்பிடம்**

இந்நகராட்சி புதிய மற்றும் பழைய பேரூந்து நிலையத்திலும், மாடுகள் பராமரிக்கும் கட்டிடத்தின் அருகிலும் தலைமை அஞ்சல் அலுவலகம் பின்புறமும் கட்டணக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு குத்தகைதாரர் மூலம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. குளிப்பதற்கு கட்டணம் நபர் 1– க்கு ரூ. 1.00 வீதமும் கழிப்பறைக்கு கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ. 0.50 பைசா வீதமும் நிர்ணயம் செய்து வசூல் செய்யயப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் இந்த இனத்தின் மூலம் மொத்த வருமானம் ரூ.25,10,340 ஆகும்.

**45. சாலை ஓரக் குத்தகை**

இந்நகராட்சிப் பகுதி சாலை ஓரங்களில் வைத்து வியாபாரம் செய்யும் சிறிய தற்காலிக கடைகளிலிருந்தும் தெருக்களில் தலைச்சுமையாகவும், சைக்கிளிலும் மற்றும் வண்டிகளிலும் வைத்து வியாபாரம் செய்பவர்களிடமிருந்து கட்டணமாக ரூ.4,20,620 அறிக்கை ஆண்டில் வரப்பெற்றது.

**46. பலன் தரும் மரங்கள்**

நகராட்சி எல்கையிலுள்ள மரங்களில் பலன் தரும் மரங்களின் மகசூலை அனுபவிக்கும் உரிமம் வகையில் வரப்பெற்ற வருமானம் ரூ.61,635/–

**47. அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்**

அறிக்கை ஆண்டில் உரிமையாணைகள் வழங்கப்பட்டதன் பேரில் நகராட்சிக்கு அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமக் கட்டணங்கள்மூலம் வருமானம் வரப்பெற்றுள்ளது, மேற்படி கட்டணங்கள் மூலம் நகராட்சிக்கு ரூ. 4,47,271/– வருவாய் வரப்பட்டுள்ளது.

**48. கல்வி வரி**

சொத்துவரி விதிப்புடன் 2.5 சதவீதம் கல்விவரி விதிக்கப்படுகிறது. காலி மனைவரி சதுர அடியின் அடிப்படையில் காலிமனைவரி விதிக்கப்படுகிறது.

**49. நகர அமைப்புத் திட்டங்கள்**

நகர அமைப்புத் திட்டம் தொடர்பான பணிகள் செய்வதற்கு ஒரு நகர அமைப்பு அலுவலரும் ஒரு நகரமைப்பு ஆய்வாளரும் பணிபுரிந்து வருகிறார்.

**50. நகர் அளவு**

இந்நகர் பகுதி சர்வே செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு ஒரு நகர அளவர் மற்றும் இரண்டு சங்கிலி ஆள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

**51 ஆக்கிரமிப்பு**

இந்நகராட்சி தெருக்கள் முறைப்படி அளவு செய்யப்பட்டுள்ளது.

**52. (அ) முழுமைத் திட்டம்**

நகரின் எதிர் கால வளர்ச்சியைக் கருதி முழுமைத் திட்டம் அரசு உத்திரவு எண் 815 நாள் 24.7.1984ல் இணக்கம் பெறப்பட்டு அரசு உத்திரவு எண் 9 நாள் 9.1.92ல் அரசு முழுமைத் திட்டத்திற்கு இறுதி ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு அரசிதழில் 5.2.1992ம் தேதியில் பிரசுரிக்கப்பட்டது.

மேற்படி தென்காசி முழுமைத் திட்டம் தற்கால வளர்ச்சியின் அடிப்படையில் மறு ஆய்வு செய்யப்பட்டு, அரசாணை எண் 169 வீ.வ.ந.வ.துறை நாள் 13.7.06ல் அரசின் ஒப்புதல் பெறப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**53. தொழில் வரி**

தொழில் வரி புதிய தொழில்வரி சட்டத்தின்படி விதிக்கப்பட்டுள்ளது. தொழில்வரி அறிக்கை ஆண்டில் இந்த தலைப்பின் கீழ் தொழில் வரி ரூ. 45.20 இலட்சம் வசூலாகி உள்ளது.

**54. கேளிக்கை வரி**

அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி கேளிக்கை வரி விதிக்கப்படுகிறது.

**55. சொத்து மாற்றங்கள் பேரில் வரி:**

அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விதிப்படி சொத்து மாற்றங்களின் பேரில் முத்திரைக் கட்டணவரி சார்பதிவாளரால் விதிக்கப்பட்டு நகராட்சிக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**2019–2020–ம் ஆண்டில் சொத்துவரி மொத்த கேட்பு வசூல்**

| இனம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|
| வரி இனம் | 353.438 | 281.78 | 71.60 |
| வரியில்லா இனம் | 147.78 | 120.90 | 26.67 |
| மொத்தம் | 501.218 | 402.68 | 98.27 |

**56. மொத்த வரவு செலவு விபரம்**

**2019–2020ம் ஆண்டில் வரவு செலவு விபரம்**

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ. 179.73 லட்சம் |
| மொத்த செலவு | ரூ. 182.04 லட்சம் |

**57. கடன்களும் முன் பணங்களும்**

கடன்களுக்கான தவணைத் தொகை 31.03.2019 வரை நிலுவையின்றி அரசுக்கு செலுத்தப்பட்டது.

**58. வரி விதிப்பு தொகுப்பு**

| | |
|---|---|
| மொத்த கட்டிட வரி விதிப்புகள் | 31049 |
| நடப்பு ஆண்டில் வரி செய்யப்பட்ட புதிய வரி விதிப்புகள் | 801 |

**59. பொதுவான விபரங்கள்**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியின் பொது நிர்வாகம் திறம்பட நடந்தது. இந்நகராட்சியின் நிர்வாகம் சீராகவும், செம்மையாகவும் நடைபெற எல்லா ஒத்துழைப்பையும் நகர்மன்ற பொறியாளர், துப்புரவு அலுவலர் மற்றும் அனைத்து பணியாளர்களும் நல்கினர்.

**60. மின் ஆளுமை**

இந்நகராட்சியில் 1997ம் ஆண்டில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் மூலம் சிறப்பான முறையில் நகராட்சிகளில் கணினிமயமாக்கல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தற்போது இந்நகராட்சியில் 24 கணினிகள் , 11 லேசர் பிரிண்டர் மற்றும் 4 டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டருடன் பொதுமக்களுக்கு சிறப்பான சேவை செய்யப்பட்டு வருகிறது.

1) சொத்துவரி, தண்ணீர்கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் பொதுமக்களுக்கு கணினி மூலம் ரசீது வழங்கப்பட்டு வருகிறது.
2) பிறப்பு இறப்பு சான்று கணினி மூலம் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது
3) இந்நகராட்சியில் இயல்புநிலை கணக்குகள் கணினிமயமாக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் பிறப்பு, இறப்பு பதிவுகள் சென்னை NIC Serverல் பதியப்பட்டு உலகமெங்கும் உள்ள இணைய தளத்தில் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் தகவல்கள் தவறாது இந்நகாட்சியில் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு பொதுமக்கள் இணையதளம் மூலம் தகவல் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இணையதளம் மூலம் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் பதில் இணையதளம் மூலமே அனுப்பப்படுகிறது.

இந்நகராட்சியில் ரூ. ஒரு இலட்சம் மதிப்பீட்டிற்கு மேலாக மேற்கொள்ளப்படும் பணிகளின் ஒப்பந்த புள்ளிகள் இணைய தளம் மூலம் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

ஆணையாளர்,
தென்காசி நகராட்சி.

# <u>தென்காசி நகராட்சி</u>

# நிர்வாக அறிக்கை

# 2019–20